1980 ஜூலை 19]

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, ஒரு தாலூகாவினுடைய தலைநகராக இருக்கிற காரணத்தினால் இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலிருந்து அதுபற்றிய குறிப்ப எதுவு அரசுக்கு வரவில்லை. அப்படிப்பட்ட குறிப்பு வருகிறபோது அரசு பரிசீலிக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே ஏற்கெனவே இருந்துவருகின்ற சிவில் கம் கிரிமினல் கோர்ட்டுகளை நீக்காமல் இருப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இருப்பதை நீக்குவது பற்றி எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை. அப்படிப்பட்ட எண்ணமும் அரசுக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் இருக்கிற இடங்களிலே இன்னும் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதைவிட அப்படி இல்லாத இடங்களிலே ஏற்படுத்தினால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும். அந்த வகையிலே ஆற்காட்டிலே நீதிமன்றத்தை இனிமேலாவது ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதியிலே மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இது இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய அரசு அங்கே நீதிமன்றத்தைத் துவங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே திரு. திருவேங்கடம் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னேன். அதைப்பற்றி ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

சென்னை மாநகரில் கால்நடைகளினால் ஏற்படும் பாதிப்பு.

*கு. கா.வி. எண் 30—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1980 ஜூலை 19

(அ) சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கால்நடைகளின் மூலமாக முக்கிய சாலைகளில் போக்குவரத்து தடைபடுவதும் அசுத்தம் ஏற்படுவதும் அதனால் மக்கள் பாதிப்புக்குள்ளாவதும் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றி மாநகராட்சிக்கு அறிவுரை ஏதும் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) (ஆ) & ஆம்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, கால்நடைகளை வளர்க்க லைசென்ஸ்கள் ஏதேனும் வழங்கப்படுகிறதா ? இது வரையில் எத்தனை கால்நடைகளுக்கு அப்படி லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏறத்தாழ 90 ஆயிரம் கால்நடைகளுக்கு உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உரிமத் தொகை ஒரு மாட்டுக்கு 3 ரூபாய்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, மாநகரத்திலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான பால் கிடைப்பதற்காக பால் விநியோகிக்கும் டெப்போக்களை அதிகமாகத் திறந்தால் கால்நடைகளின் எண்ணிக்கை நகரத்திலே குறையும் அல்லவா, அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தமிழக பால்வள நிறுவனத்தின் மூலமாக ஆங்காங்கே அதிகமான பால் பூத்துகளை ஏற்படுத்தி அதன் மூலமாக பால் அதிகமான அளவிற்குக் கிடைக்கச் செய்கிற முறையிலே அதைக் கவனிப்பதற்கு 4 பேர்கள் கொண்ட கமிட்டி ஒன்று அதை ஆராய்ந்து செயல்படுத்தி வருகிறது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் மாடுகள் அதிகமாக இருப்பதால் சாணத்தை சாக்கடைகளிலே விடுவதால் ஏற்படுகிற தொல்லைகள் அதிகமாக இருப்பதால் மாடுகளை சென்னை நகரிலிருந்து வெளியே அகற்றுவதற்கான எண்ணம் மாநகராட்சியிடம் இருந்ததே, அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கால்நடைகளின் மூலமாக ஏற்படுகிற அசுத்தம் குறிப்பாக மாட்டுச் சாணத்தின் மூலமாக கழிவு நீர் அகற்றப்படாத சூழ்நிலை இருக்கிறது. மனிதர்கள்

1980 ஜூலை 19]

போடுகிற அசுத்தத்தைவிட பத்து மடங்கு அதிகமான அசுத்தம் கால்நடைகள் போடுகிற அசுத்தம் தான், இதன் காரணத்தினால் கழிவு நீர் அகற்றப்படாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கால்நடைகளை எல்லாம் ஒரு பொது இடத்திற்குக் கொண்டுபோய் வைத்து அங்கே பால் கறக்கின்ற முறையிலேயும், யார் யார் மாடுகள் வைத்து வளர்க்கிறார்களோ அவர்களுக்கு அதற்காக ஷெட்டுகளைப் போட்டுக் கொடுத்து, அங்கேயே பாலைக் கறக்கின்ற முறையிலேயும் ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, கால்நடைகளை அகற்றுவதுபற்றி குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு முன்வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் கடந்த 30—5—1977-ல் நான்கு பேர்கள் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

அந்த நான்கு பேர் கொண்ட கமிட்டியில் ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் ஒருவரும், சென்னை மாநகராட்சியினுடைய ஆணையாளர் ஒருவரும், காவல் துறை ஆணையாளரும், கால்நடை வளர்ச்சி இயக்குனரும் ஆக நான்கு பேர் கொண்ட கமிட்டி ஏற்படுத்தப்பட்டு, நகரிலே பிரச்சாரத்தின் மூலமாகக் கால்நடைகளால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைப் பற்றியும், சாணம் சாக்கடைகளை அடைத்துக் கொள்வது பற்றியும், தற்போதுள்ள மாட்டுத் தொழுவங்களைச் சோதனை செய்யும் முறைகளை முடுக்கி விடுவது பற்றியும், நடைபாதைகளில் பால் கறக்கும் செயல் முழுவதுமாக ஒடுக்கப்பட வேண்டுமென்றும், கண்ட இடங்களில் திரியும் கால்நடைகளை பட்டிகளில் அடைத்து வைப்பதற்கும், பால் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக அதிகமான அளவில் பால் விநியோகம் செய்ய பூத்துகளை ஏற்படுத்துவது பற்றியும் அந்த நான்கு பேர் கொண்ட கமிட்டி இன்று பரிசீலித்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, சென்னை நகரத்தில் சாக்கடைகள் அடைத்துக் கொள்வதற்கு கால்நடைகள்தான் காரணம் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் 30—5—77-ல் அமைக்கப்பட்ட கமிட்டி கடந்த மூன்றாண்டுகளாகப் பரிசீலித்து இப்பொழுதுதான் முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். இனி வருவது மழைக்காலம். அப்பொழுது எங்கு பார்த்தாலும் சாக்கடை அடைபடும். சென்னை நகரத்தில்அசுத்தத்தையும் சுகாதாரக்குறைவையும்ஏற்படுத்துவது

இந்த சாக்கடை அடைப்புதான். கமிட்டி ரிப்போர்ட் வருவதற்கே மூன்று வருஷம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே துரிதமாக இந்த சாணத்தை அகற்றுவதற்கு கமிட்டியின் சிபாரிசுகள் உடனடியாக எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கனவே கமிட்டி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். இப்பொழுதுதான் எடுக்கப்போகிறது என்று அல்ல. கடந்த மூன்றாண்டுக் காலமாக தொடர்ந்து நடைபெற்று வந்த முறையைத்தான் சொன்னேன். மேலும் மாநகராட்சியில், ஏழு இலட்சம் பேர்களுக்கு மட்டுமே கழிவு நீரை அகற்றுவதற்கான வழிவகைகள் இருக்கின்றன. ஆனால் மாநகராட்சியின் ஜனத்தொகை 35 இலட்சம், மேலும் வந்து போகின்றவர்களின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு 10 இலட்சம் பேர். இந்த 45 இலட்சம் பேர்களுக்கும் கழிவை, கழிவு நீரை அகற்றுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைகளைச் செய்ய வேண்டுமென்றால் ஏறத்தாழ பத்தாண்டுக் காலம் பிடிக்கும். ஆகவே, இவைகளையெல்லாம் முறைப்படுத்திச் செய்ய வேண்டிய நிலைகளை ஆராய்ந்து செய்ய மாநகராட்சி மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, இதே போன்று கால்நடைகளால் மதுரை மாநகராட்சியிலேயும் போக்குவரத்திற்கு அதிக நெரிசல் ஏற்படுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி சென்னையைப் பற்றியது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) விண்வெளிக்கோள் ரோகிணி வெற்றிகரமாகச் செலுத்தப் பெற்றுள்ளதற்குப் பாராட்டு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அறிவியல் அறிஞர்கள் பலரும் பாராட்டுகின்ற முறையிலும், வியக்கத்தக்க வகையிலும் இந்திய விண்வெளி அறிவியல் அறிஞர்கள் நேற்று எஸ். எல். வி.3